குறிப்பிடப்பட்ட வரைமுறைகளுக்கு புறம்பாக பொதுமக்கள் குடியிருப்புப் பகுதிகள் பாதிக்கப்படும் விதத்தில் நடத்தப்படுவது பற்றி அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இப்பகுதியில் வரைமுறைகளுக்கு புறம்பாக குடியிருப்பு பகுதிகளில் செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு உள்ளாட்சி நிறுவனங்களால் உரிமம் தரப்படவில்லை என்ற தகவல் அரசுக்கு தரப்பட்டுள்ளது.

திரு. ஜே. சி.டி. பிரபாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பகுதிகளில மொத்தம் எத்தனை செங்கல் தொழிற்சாலைகளுக்கு உரிமம் தரப்பட்டிருக்கின்றன? இன்னும் எத்தனை பேர்கள் இதற்காக விண்ணப்பித்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அடையாளம்பட்டு ஊராட்சியில் 9 செங்கல் தொழிற்சாலைகளும், நொளம்பூர் ஊராட்சியில் 20 செங்கல் தொழிற்சாலைகளும் உள்ளன. மற்றும் புதிதாகத் தொழிற்சாலைகள் வேண்டுமென்று கேட்டு விண்ணப்பங்கள் வந்ததாக் குறிப்புகள் இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் சொல்லும் பொழுது மேலும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அந்தப் பகுதியிலே 15 அடி, 10 அடி வேண்டுமென்று அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்களை நம்முடைய உத்தரவில்லாமல் ஆக்கிரமித்துக்கொண்டு தகவல் கொடுக்காமல் எடுத்திருப்பதை அரசு அறியுமா? மேலும் அந்தப் பகுதிகளில் பள்ளமாக எடுத்துவிடுவதால் நெல் பயிரிடும் விவசாயிகள் அவதிப்படுவது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அப்படியிருந்தால் அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அப்படிப்பட்ட குறிப்புகள் அரசிடத்தில் இல்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால் அவைகள் உடனடியாகக் கவனிக்கப்படும்.

ஈரோட்டில் திரையரங்கம் மற்றும் திருமண மண்டபம் கட்டும் திட்டம்.

*வினா எண். 251— திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரி கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஈரோடு நகராட்சி ஈரோடு நகரில் திரையரங்கம் மற்றும் திருமண மண்டபம் கட்டுவதற்கு அரசிடம் அனுமதி கோரி உள்ளதா?

1982 பிப்ரவரி 18]

(ஆ) ஆம் எனில் அதற்கான அனுமதி வழங்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) அண்டு (ஆ) திரையரங்கம் கட்ட அனுமதி கோரவில்லை. திருமண மண்டபம் கட்டுவதற்கு நில அடைவு செய்யும் நகராட்சி ஆணையாளரின் பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளது. பரிசீலனைக்குப் பின் தகுந்த ஆணை வழங்கப்படும்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகரம் வளர்ந்து வரும் நகரமாக இருப்பதால் அங்கே ஒரு திருமண மண்டபம் கட்டுவதற்குப் பரிசீலிப்பதாகக் கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே அங்கே கல்லூரி மாணவர்கள் விளையாட்டு அரங்கம் இல்லை. எனவே, அரசு அங்கே விளையாட்டு அரங்கம் அமைத்துத்தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, விளையாட்டு அரங்கம் தேவை என்று சொன்னால் அது பரிசீலிக்கப் படும்.

கரிகரி பகுதியிலுள்ள தொழுநோய் மருத்துவமனை

*வினா எண் 252—திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்ட கரிகரி பகுதியில் உள்ள தொழுநோய் மருத்துவமனைக்கு அரசு மானியம் ஏதேனும் அளிக்கிறதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது?

(இ) தற்போது உள்ள படுக்கைகள் எத்தனை?

(ஈ) மருத்துவர்கள் எத்தனை பேர்?

(உ) சிகிச்சை பெறும் வெளி, உள் நோயாளிகள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம். (ஆ) ஒரு ஆண்டிற்கு ரூ. 2 லட்சம் மானியம் அளிக்கப்படுகிறது.

(இ) 180 படுக்கைகள் உள்ளன.

(ஈ) 8 மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்,

(உ) புற நோயாளிகள் எண்ணிக்கை 757 மற்றும் உள் நோயாளிகளின் எண்ணிக்கை 92 ஆகும்.